**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 23 நாள்: 29.01.2025**

**வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பெருமாள் கோவில் தெருவில் ரூ.50 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டுத் திடலினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-145க்குட்பட்ட நெற்குன்றம், பெருமாள் கோவில் தெருவில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதையுடன் கூடிய புதிய விளையாட்டுத் திடலினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் இன்று (29.01.2025) பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

வளசரவாக்கம் மண்டலம், வார்டு-145, நெற்குன்றம், பெருமாள் கோயில் தெருவில் 1572.56 ச.மீ. பரப்பளவு கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் நடைபாதையுடன் புதிய விளையாட்டுத் திடல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுத் திடலில் சுற்றுச்சுவர், நடைபாதை, கழிவறை, திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், கபடி மைதானம் மற்றும் மின்வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுத்திடல் மூலமாக நெற்குன்றம் பகுதியில் உள்ள பல்லவன் நகர், மாதா கோயில் தெரு, பெருமாள் கோயில் தெரு, கிருஷ்ணா நகர், சக்தி நகர் மற்றும் அழகம்மாள் நகர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் திரு. க. கணபதி, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு.நொளம்பூர் வே. ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.த.சத்தியநாதன், திரு.வி.கிரிதரன், திருமதி சாந்தி ராமலிங்கம், திரு.ஏ.ஸ்டாலின், திருமதி ர.செல்வி ரமேஷ், திருமதி மா. ரமணி மாதவன், மண்டல அலுவலர் திரு.கே.உமாபதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**